CHURCH OF THE
# HOLY FAMILY
## — KAJANG —

கிறிஸ்துவுக்குள் அன்பார்த்த நண்பர்களே,

அல்லேலூயா! இறைவன் உயிர்த்தெழுந்தார்! அவர் உண்மையில் உயிர்த்தெழுந்தார்!

நம் நோன்பு முடிந்தது, நம் விழா கொண்டாட்டம் தொடங்கிவிட்டது . 40 நாட்கள் நோன்பு மற்றும் தவத்திற்குப் பிறகு, திருஅவை இப்போது நம் துக்கம் என்னும் முக்காடும் தவம் என்னும் உடையை ஒதுக்கி வைத்துவிட்டு, மறுபிறப்பு என்ற விழா கொண்டாட்ட ஆடையை ஏற்கும்படி கட்டளையிடுகிறது. ஆனால் பாஸ்கா பெருவிழா புனித வெள்ளியின் நினைவை அழிக்கவில்லை.

நம்மில் பலருக்குக் கடந்த இரண்டு ஆண்டுகள் நீட்டிக்கப்பட்ட பெரிய வெள்ளி போல உணர்வு ஏற்பட்டுள்ளது. ஆனால் இந்த வேதனையான மற்றும் குழப்பமான அனுபவத்தின் நீண்ட "இருளுக்கு" பிறகு, பாஸ்கா பெருவிழா நம்பிக்கையின் ஒளிகளை நாம் இப்போது பார்க்கத் தொடங்குகிறோம். பாஸ்கா பெருவிழாவின் செய்தி தெளிவாக உள்ளது: தோல்விக்குப் பிறகு வெற்றியும், பிரிவினைக்குப் பிறகு மீண்டும் இணைவதும், துக்கத்திற்குப் பிறகு மகிழ்ச்சியும், மரணத்திற்குப் பிறகு வாழ்வும் உள்ளன என்பதாகும்.

பல மாதங்களாக மூடப்பட்டு, அருளடையாளக் கொண்டாட்டங்கள் நிறுத்தப்பட்ட பின்னர், கடந்த நவம்பரில் இருந்து தேவாலயங்களின் கதவுகள் திறக்கப்பட்டுள்ளன. ஆனாலும், பலர் பல்வேறு காரணங்களுக்காக வீட்டிலேயே இருந்து திருப்பலியில் பங்குபெறுவதைத் தொடர்வதைக் கடைப்பிடிப்பதை நாங்கள் கவனித்துள்ளோம். சிலர் மருத்துவக் காரணங்களுக்காவும் மற்றவர்கள் நிகழ்நிலையில் திருப்பலியில் பங்கெடுப்பதைப் பழகியவர்களாகவும், மேலும் சிலர் உற்சாகத்தில் தளர்ச்சியையும் தங்கள் நம்பிக்கையில் வீழ்ச்சியையும் அனுபவிப்பவர்களாகவும் இருக்கிறார்கள்..

நமது நாடு குறுந்தொற்றுக்கு மாறியுள்ள நிலையில், அருள்பணியாளர்களாகிய நாங்கள், உங்களை மீண்டும் பங்கு ஆலயமான உங்கள் இல்லத்திற்கு திரும்ப அழைக்கிறோம்.
கடந்த இரண்டு ஆண்டுகளாக, சில சொற்கள் மற்றும் சொற்றொடர்கள் அதிகாரிகள் மற்றும் நிபுணர்களால் பயன்படுத்தப்பட்ட நிலையில், அவை நமது அன்றாட பயன்பாட்டு சொற்களஞ்சியத்தின் முக்கிய சொற்களாக மாறிவிட்டன. ஆனால் நமது கத்தோலிக்க நம்பிக்கையின் அடிப்படைக் கோட்பாடுகளை இவை புதிய நம்பிக்கை கோட்பாடுகளாக மாற்றும் அளவுக்கு இந்தப் புதிய சொற்களையும் கருத்தாக்கங்களையும் பயன்படுத்துவதை நாம் அனுமதிக்கக் கூடாது.

பங்கு ஆலயத்திற்கு திரும்புவதற்கான ஒரு முடிவுக்கு வருவதற்கு இந்த விளக்கம் உங்களுக்கு ஒரு சிறந்த புரிதலைப் பெற உதவும் என்று நாங்கள் நம்புகிறோம்.

11 Jalan Gereja, 43000 Kajang, Selangor Darul Ehsan, Malaysia • +603 87331154 • HolyFamily@archkl.org

CHURCH OF THE
HOLY FAMILY
— KAJANG —

**1.0 இயல்பான vs இயல்பற்ற**
நாம் "இப்புதிய இயல்பு நிலைக்கு" ஏற்றவாறு நம்மை தயாரித்துக்கொள்ள வேண்டும் என்று நமக்கு அறிவுறுத்தப்பட்டிருகிறது. இருப்பினும், இது நமது வழக்கமான வழிமுறைக்குப் புறம்பானதாக அமைய ஒருபோதும் வழிவிடக்கூடாது. பங்கிலிருந்து நிரந்தரமாக விலகி இருப்பதும், அருளடையாளங்களை நாமே மறுதலிப்பதும் ஒருபோதும் இயல்பானதல்ல. நேரடி ஒளிபரப்பின் வழி அருளைடையாள கொண்டாட்டங்களை அனுபவிப்பது என்பது நமக்கு ஒருபோதும் இயல்பானது அல்ல. மேலும் சமூக இடைவெளி என்ற காரணத்தினால் சமூக ஒன்றுகூடலுக்கு நாம் மறுப்புத் தெரிவுப்பதும் இயல்பானதல்ல. பொது நலனுக்காக தேவையான நடவடிக்கைகளை எடுப்பதற்கு நாம் எவ்வளவு கவனமாக இருக்கிறோமோ , அந்த அளவுக்கு கத்தோலிக்கர்களாகிய நாம் இயல்பற்ற வழிவகைகளை இயல்பாக்கிகொள்வதை முறியடிக்க வேண்டும். இது பங்கு ஆலயத்திற்கு வர வேண்டிய காலம். பங்கு ஆலயமான நமது இல்லத்திற்கு வருவது இயல்பானதே!

**2.0 அத்தியாவசியம் Vs அத்தியாவசியமற்றது**
ஆரம்ப பொது உடல்நல நடவடிக்கைகளின் அத்தியாவசியமற்ற சேவைகளுடன் பொது வழிபாட்டை இணைத்தது எதிர்பாரமல் நிகழ்ந்ததாகும். “சமயம் எப்போது தேவையற்றதாக மாறியது?” என்ற கேள்வியைக் கேட்பது நல்லது. மாறாக, சமயம் மிகவும் அத்தியாவசியமான சேவையாகும். நம் ஆண்டவர் சோதிக்கப்பட்டபோது, ‘மனிதர் அப்பத்தினால் மட்டுமல்ல, மாறாக, கடவுளின் வாய்ச்சொல் ஒவ்வொன்றாலும் வாழ்வர்’ என்று அறிவுறுத்தினாரர் (மத்தேயு 4:4). இன்றியமையாதவைகளுக்கு வீட்டிற்கு வர வேண்டிய நேரம் இது. ஆகவே, அத்தியாவசியமானதை அடைய இல்லமான ஆலயத்தை நாட வேண்டும்.

**3. பாதுகாப்பு Vs மீட்பு**
கடந்த இரண்டு ஆண்டுகளாக, நமது உறுப்பினர்களின் பாதுகாப்பை உறுதி செய்வதற்காக பல கூடுதலான பாதுகாப்பு நடவடிக்கைகளை நாம் மேற்கொண்டோம். ஆனால் மீண்டும், நல வாழ்க்கையைப் பாதுகாப்பதை நிலைவாழ்வின் முன்னுரிமையோடு நாம் ஒருபோதும் குழப்பக்கூடாது. நம்முடைய ஆண்டராகிய இயேசு கிறிஸ்து சிலுவையில் நமக்காக வென்றெடுத்து பாஸ்கா வெருவிழாவில் வெளிப்படுத்திய நிலைவாழ்வில் பங்கேற்பதே நமது வாழ்வின் இறுதி இலக்கு. ஒவ்வொருவரின் நலவாழ்வையும் கவனித்துக்கொள்வது மிக விவேகமானதும் முக்கியக் கடமையாகும்.

ஒவ்வொருவரின் நலவாழ்வைக் கருத்தில் கொள்வதும் மற்றவரின் உயிருக்கு ஆபத்தில் இளைவிப்பதைத் தவிர்ப்பது விவேகமான மற்றும் முக்கியக் கடமையாக இருப்பதால், நம் வாழ்வின் நோக்கம் நோயையும் இறப்பையும் தவிர்ப்பது மட்டுமல்ல, மாறாக நிலைவாழ்வை அடைவதே என்பதை ஒருபோதும் மறந்துவிடக் கூடாது. எனவே, உங்கள் ஆன்மாவின் மீட்புக்காக நமது இல்லமான ஆலயத்திற்கு திரும்பி வர வேண்டும்.

CHURCH OF THE
HOLY FAMILY
— KAJANG —

பாஸ்கா காலத்தின போது, அன்றாட வாசகங்கள் திருத்தூதர் பணிகள் நூலிலிருந்து எடுக்கப்பட்டிருக்கும். இய்ந வாசகங்கள் ஒரு புதிய திருஅவையைய விவரிக்கின்றன. ஆரம்பகால கிறிஸ்தவ சமூகம், ஒரு விசித்திரமான, எதிர்ப்பு நிறைந்த மற்றும் ஆபத்தான சூழலில் வாழ்ந்தது. ஆனாலும், திருத்தூதர் பணிகள் நூல் ஒரு கோழைத்தனமான, அச்சமிகுந்த பாதுகாப்பைத் ஏடும் திருஅவையாக அல்ல, மாறாக நம்பமுடியாத தடைகள், எதிர்ப்புகள் மற்றும் துன்புறுத்தல்களை எதிர்கொள்வதில் வெற்றி மற்றும் துடிப்பான ஒன்றாக இருந்தது. அவர்களின் அனுபவம் நமக்கும் நல்ல முன்மாதிரியாக இருக்கக்கூடும்.

என் அன்பான நண்பர்களே, உங்களில் பலர் பயந்தவர்களாகவும், பலர் எதிர்காலத்தின் நிச்சயமற்ற தன்மையைப் பற்றி அவநம்பிக்கை கொண்டவர்களாகவும், மேலும் உங்களில் சிலர் இறைவேண்டலையும் நம்பிக்கையையும் கைவிட ஆசைப்படுவது எங்களுக்குப் புரிகிறது. ஆனால் நமக்காக இறந்தும் உயிர்த்தெழுந்தும் தன் அன்பை வெளிப்படுத்திய ஆண்டவர், நமது சந்தேகங்களின் கல்லறைகள், பயத்தின் கல்லறைகள், விரக்தியின் கல்லறைகள், மனநிறைவின் கல்லறைகள். நமக்காகவும், நம் வாழ்வில் கடவுளின் அன்பான ஆற்றலுக்கான குறைந்த எதிர்பார்ப்புகளின் கல்லறைகள். இன்று நம் ஆன்மீகக் கல்லறைகளிலிருந்து வெளிவர நம்மை அழைக்கிறார்.

நீங்கள் ஆலயத்தை விட்டு விலகி இருந்தால் மீண்டும் திரும்பி வாருங்கள். நமது பங்கு ஆலயமே நமது இல்லம். இங்குதான், வேறு இடங்களில் அல்ல, நம் வானகத் தந்தையகிய கடவுளின் குரலைக் கேட்க முடியும். காணாமல் போன மகன் உவமையில் அவரது குரலைக ்கேட்டோம். அவர் நீண்ட காலமாக காணாமற் போன மகனைக ்கண்டபோது தழுவிக்கொண்டார். மேலும், ‘கொழுத்த கன்றைக் கொண்டு வந்து அடியுங்கள்; நாம் மகிழ்ந்து விருந்து கொண்டாடுவோம். ஏனெனில், என் மகன் இவன் இறந்துபோயிருந்தான்; மீண்டும் உயிர் பெற்று வந்துள்ளான். காணாமற்போயிருந்தான்; மீண்டும் கிடைத்துள்ளான்’ (லூக்கா 15: 23-24) என்றார்

அனைவருக்கும் ஆசீர் நிறைந்த பாஸ்கா பெருவிழா வாழ்த்துக்கள். அவர் சொன்னபடி உயிர்த்தெழுந்தார்,அல்லேலூயா!

கிறிஸ்துவில் உங்கள் உண்மையுள்ள.